දිසාපති දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය
தொலைபேசி
Telephone
021-222 2235

ෆැක්ස්
பெக்ஸ்
Fax
021-222 2355
E.mail: gajaffna@sltnet.lk

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.

මගේ අංකය
எனது எண்
My No.
JK/PROC/DIG.PRINT/09/01/2019

ඔබේ අංකය
உமது எண்
Your No.

දිනය
திகதி
Date
30.05.2019

Web Page

……………………………..
……………………………
……………………………..

# கூறுவிலை கோரல்

## சான்றிதழ் அச்சிடுதல் (Certificate Printing)

யாழ் மாவட்ட செயலகத்தில் சான்றிதழ் அச்சிடும் பொருட்டு கூறுவிலை கோரப்படுகின்றது. 2019.06.10 ஆந் திகதி பி.ப 2.30 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“சான்றிதழ் அச்சிடுவதற்கான கூறுவிலை”** எனக் குறிப்பிட்டு **“தலைவர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்”** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு அல்லது நேரடியாக செயலக பெறுகை அலகில் **(அறை இல 42)** சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். அன்றையதினம் பி.ப2.30 மணிக்கு கூறுவிலைகள் திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

**நிபந்தனைகளும் அறிவுறுத்தல்களும்**

1. தங்களது வியாபாரப் பதிவுச் சான்றிதழில் குறிப்பிட்ட வியாபாரப் பதிவுத் தன்மைக்கு அமைவாக மாவட்டச் செயலகத்தில் தாங்கள் குறித்த வேலைகளுக்கு வழங்குனராக பதிவு செய்திருந்தால் மட்டுமே கூறுவிலைகள் சமர்ப்பிக்க முடியும்.
2. இப்படிவ அமைப்பில் எவ்வித மாற்றமுமின்றி பூரணப்படுத்தப்பட வேண்டும். மாற்றீட்டுப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது
3. எம்மால் கோரப்பட்ட நிபந்தனைகள், நியமங்களுக்கு அமைவாக சான்றிதழ் அச்சிட்டு வழங்கல் வேண்டும்.
4. தங்களால் வழங்கப்பட்ட கூறுவிலைகளில் வலுவான காலப்பகுதிக்குள் விலை மாற்றம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் உரிய காலப்பகுதிக்குள் எம்மால் வழங்கற் கட்டளை சமர்ப்பித்ததன் பின்னர் தாங்கள் சான்றிதழினை அச்சிட்டு மாவட்ட செயலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறு அச்சிட்டு வழங்காதவிடத்து தாங்கள் தொடர்ந்து வரும் காலங்களில் கேள்வி நடைமுறைகளில் இருந்து நீக்கப்படுவீர்கள்.
5. தாங்கள் வற்வரி (VAT) செலுத்துபவராக இருப்பின் கட்டாயமாக வற் இலக்கம் மற்றும் சான்றிதழின் பிரதி என்பன இணைக்கப்படல் வேண்டும்.
6. கூறுவிலைகள் 10.06.2019 தொடக்கம் 31.12.2019 வரை வலுவுள்ளதாக இருக்கும்.
7. குறித்ததொரு கூறுவிலையினை ஏற்றுக்கொள்வதோ, நிராகரிப்பதோ பெறுகைக்குழுவின் தீர்மானமாகும்
8. **கூறுவிலைகளுக்கான பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

ம.சிவகுமார்,
கணக்காளர்(பெறுகை)
மாவட்ட செயலருக்காக,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

M.Sivakumar
Accountant (Procurement)
for Govt. Agent/District Secretary
District Secretariat
Jaffna

21

**My No:JK/PROC/DIG.PRINT/09/01/2019**
Procurement Unit,
District Secretariat, Jaffna
30.05.2019

....................................
....................................
....................................

## CALLING QUOTATION FOR CERTIFICATE PRINTING

| S.No | Details | Material | Size | Colour | Quantity | Unit Price Rs. (Without Vat) |
|---|---|---|---|---|---|---|
| 1 | Certificate printing | Ice Gold Card - 300gsm | A4 | Four Colour | 1 | |
| 2 | Certificate printing | Art Board - 300gsm | A4 | Four Colour | 1 | |

தங்களால் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கின்றேன் எனவும். இந்நடைமுறைகளில் இருந்து நான் தவறும் பட்சத்தில் கூறுவிலை கோரலிலிருந்து நீக்கப்படுவேன் என்பதை அறிவேன் எனவும், என்னால் வழங்கப்பட்ட கூறுவிலைகளுக்கமைவாகவும் விபரணங்களுக்கமைவாகவும் சான்றிதழினை தாங்கள் கோரிக்கையிடும் போது அச்சிட்டு வழங்க சம்மதிக்கிறேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

VAT Registration No:.......................

....................................
Signature & Rubber Stamp

....................................
Date